செ.வெ.எண்:441 நாள்: 15.08.2021

# புதுக்கோட்டையில் 75-வது சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

---

புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில் இன்று (15.08.2021) நடைபெற்ற 75-வது சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டார்கள்.

இவ்விழாவின்போது, புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா தடுப்பு பணிகளில் முன்நின்று சிறப்பாக பணியாற்றி வரும் வருவாய்த்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, காவல்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, பேரூராட்சிகள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை உள்ளிட்ட 40 துறைகளைச் சார்ந்த 343 அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

மேலும் வேளாண் பொறியியல்துறை சார்பில் தலா ரூ.37.80 லட்சம் என மொத்தம் ரூ.75.60 லட்சம் மதிப்பீட்டில் வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் 2 இயந்திரங்களை புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயன்பாட்டிற்கு வாடகைக்கு விடுவதற்காக வேளாண் பொறியியல் துறைக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.நிஷா பார்த்திபன் இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா, தண்டாயுதபாணி, சொர்ணராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) கருணாகரன், வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் செல்வம், மாவட்ட ஆட்சியரக மேலாளர் (நீதியியல்) கபிரியேல் சார்லஸ், மாவட்ட ஆட்சியரக மேலாளர் (பொது) செந்தமிழ்குமார், புதுக்கோட்டை வட்டாட்சியர் செந்தில்குமார், புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் நாகராஜன் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**